[ செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல. 1114 | 1970 ஆகஸ்ட் 21 செவ்வாய்க்கிழமை | ★ | விலை சதம் 5.

University of Jaffna Sri Lanka RECEIVED 7-8 Periodicals Division Library

## இலங்கையர் அல்லாதார் ஆதிக்கம் ஒழிகிறது

# 42 பேரின் ஜவுளி பெர்மிட் நேற்று ரத்தானது

## லங்கா சலுசலவின் தலைவர் கடும் நடவடிக்கை

**அட்டன், குருநாகலை, கண்டி ஆகிய இடங்களைச் சேர்ந்த 42 இலங்கையர் அல்லாதவர்களின் ஜவுளிக் கோட்டா பெர்மிட்டுக்களை லங்கா சலுசலவின் தலைவர் திரு. டக்ளஸ் பெரேரா நேற்று ரத்து செய்துள்ளார்.**

திரு. டக்ளஸ் பெரேரா மூன்று தினங்களுக்கு முன்னர் கண்டி மாவட்டத்துக்கு விஜயம் செய்து லங்கா சலுசலவினால் ஜவுளிக் கோட்டா பெர்மிட் வழங்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை ஆராய்ந்த பின்னர் மேற்கண்ட நடவடிக்கையை எடுத்தார்.

சலுசலவின் முன்னைய நிர்வாகம் இலங்கையர் அல்லாதோர் பலருக்கு ஜவுளிக் கோட்டா, பெர்மிட் வழங்கி இருந்தது.

ஜவுளிக் கோட்டா, பெர்மிட் வழங்கப்பட்ட இலங்கையர் அல்லாதோரின் பெயர்ப் பட்டியலைச் சமர்ப்பிக்கும்படி லங்கா சலுசலவின் சகல கிளைகளுக்கும் திரு. டக்ளஸ் பெரேரா சுற்றுநிருபம் அனுப்பி இருந்தார்.

கண்டி மாவட்டத்தில் 13 பேருக்கும் அட்டன் பகுதியில் 13 பேருக்கும், குருநாகலைப் பகுதியில் 16 பேருக்கும் ஜவுளிக் கோட்டா பெர்மிட் வழங்கப்பட்டிருந்தது இதன் மூலம் தெரியவந்தது.

திரு. டக்ளஸ் பெரேரா உடனடியாக இந்த 42 பேருடைய ஜவுளிக் கோட்டா பெர்மிட்டுகளையும் ரத்துச் செய்தார்.

இலங்கையர் அல்லாதவர்கள் என்று தெரிந்த பின்னரும் மாதம் 150 யார் ஜவுளி வகைகளை சலுசலவில் இருந்து வாங்குவதற்கு முன்னைய நிர்வாகம் இவர்களுக்குப் பெர்மிட் வழங்கி இருந்ததாக திரு. டக்ளஸ் பெரேரா "தந்தி" நிருபரிடம் சொன்னார். (5)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஆக. 21

கண்டி போகம்பரை மைதானத்தில் நேற்று மாலை இழுக்கப்பட்ட 312-வது தேசிய சுவீப்பின் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு

**05 S 0641**

ரூ. 97,840

இரண்டாவது பரிசு

**31 Q 0099**

ரூ. 39,136

மூன்றாவது பரிசு

**16 C 0798**

ரூ. 9,784

(4-ம் பக்கம் பார்க்க)

### மீனாட்சி



என்னுங்க, "நேர்வ் கானஸ்" (நச்சுக் காற்று) அத்லாந்திக் சமுத்திரத்துள் புதைக்குதாமே அமெரிக்கா?,

ஆமாங்க, வல்லரசுப் போட்டியில் உலகத்தையே ஆலகால விஷப் படுக்கையாக்கும் எண்ணமோ யார் கண்டார்!

## அரச ஊழியர் சேவைக்கு உத்தரவாதம் அளிக்குக

"புதிய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்க ஊழியர் சேவைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்-"

அரசமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வாவிடம் சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் அரசாங்க எழுது சேவையாளர் காங்கிரஸ் மேற்கண்டவாறு கேட்டுள்ளது-

அரசாங்க எழுது சேவையாளர் காங்கிரஸின் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

* அரசாங்க சேவைக்கு ஆள் திரட்டும் போது போட்டிப் பரீட்சை மூலமே திரட்டப்பட வேண்டும்-

* கலாசார கல்வி உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்-

* ஆசிரியர்களின் இடமாற்றம் பதவி நியமனம் வேலை நீக்கம் ஆகியவைகளைக் கையாளுவதற்காக சுயேச்சையாக இயங்கக் கூடிய மத்திய சபை ஒன்றை நிறுவவேண்டும்.

* அரசாங்க சேவைக் கமிஷன் ஒழிக்கப்படும் பட்சத்தில் புதிய சபை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்- (5)

## பிரிட்டனின் செய்மதி

லண்டன், ஆக- 20

செப்டம்பர் முதலாம் திகதி செய்மதி ஒன்றை பிரிட்டன் விண்வெளிக்கு அனுப்ப உள்ளது-

180 இருத்தல் நிறையுள்ள அந்தச் செய்மதியில் பவன அமுக்கத்தை அளவிடக்கூடிய தங்க முலாம் பூசப்பட்ட கருவி ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கும். (5)

## 2 கடுகதி பஸ்கள் மோதல் 31 பேர் இதனால் காயம்

காலி - மாத்தறை வீதியில் இரு கடுகதி பஸ்கள் மோதியதால் 31 பஸ் பிரயாணிகள் காயம் அடைந்தனர்.

கம்புருகன்வா ஏரிக்கு அருகாமையில் இந்த விபத்து இடம் பெற்றது-

காயம் அடைந்தவர்களில் 20 பேர் அரசாங்க குமாஸ்தாக்கள் என்றும் இவர்களில் பலர் அபாயகரமான நிலையில் மாத்தறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறைப் பொலீஸார் இந்த விபத்து சம்பந்தமாக விசாரணை செய்து வருகின்றனர்.

விபத்தினால் இரு பஸ்களுக்கும் கடும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் இரு பஸ்களும் எதிர்த் திசைகளில் சென்று கொண்டிருந்த போது மோதிக் கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

## தாஷ்கண்டில் "தில்லானா மோகனாம்பாள்"

தாஷ்குண்டில் நடைபெற உள்ள ஆசிரிய—ஆபிரிக்க திரைப்பட விழாவில் தில்லானா மோகனாம்பாள் படமும் இடம்பெற உள்ளது-

செப்டம்பர் 15-ம் திகதி நடைபெறும் இந்தத் திரைப்பட விழாவில் இருபதுக்கு மேற்பட்ட நாடுகள் கலந்து கொள்ள உள்ளன.

பிரபல ஹிந்தி நடிகரான ராஜ்கபூர் நடித்த "சப்னேன் கா சௌ தாகர்" என்ற படமும் திரைப்பட விழாவில் இடம்பெற உள்ளது- (5)



சித்ரகலாவின் "முள்ளில் ரோஜா" நாடகத்தில் செல்வராஜும், பொஸ்கோவும் தோன்றும் ஒரு கட்டம் இது. இந்த நாடகம் இம்மாதம் 23-ம் திகதி கொழும்பு, லும்பினி மண்டபத்தில் தபால், தந்தி அமைச்சர் திரு. குமாரசூரியர் தலைமையில் அரங்கேற்றப்படும். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னிடம் தொழிலாளியாக வேலை செய்தாள்

# அவளுடன் ஒருபோதும் உடலுறவு கிடையாது

### அப்பட்டமான கட்டுக் கதை என்கிறார் எதிர்மனுதார்

"மனுதார் என்னிடம் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். அவருடன் நான் ஒரு போதும் உடலுறவு கொண்டதில்லை- என் மூலம் அவர் கர்ப்பம் தரித்தார் என்பதும், அதைக் கலைக்க நான் அவரைப் பூசாரியிடம் அழைத்துச் சென்றேன் என்பதும் பொய்- எனது பெயரைக் கெடுப்பதற்காக சோடிக்கப்பட்ட கதைதான் இது- எனது மனைவி மனுதாரை விட அழகானவர்- அவருடன் நான் சந்தோஷமாகவே வாழ்க்கை நடத்தி வருகிறேன்"-

மத்துகம மாஜிஸ்திரேட் திரு. நிசங்கா வீரரத்தின முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஜீவனாம்ச வழக்கொன்றில் சாட்சியம் அளித்த எதிர்மனுதார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வழக்கில், லெட்பந்துறை, பெல்லுடவத்தைத் தோட்டத் தொழிலாளியான சந்தையா ராசமணி என்ற பெண், அதே தோட்டத்தில் கண்டக்டராகக் கடமையாற்றும் மெய்யப்பன் சுப்பிரமணியம் என்பவரிடமிருந்து, தனது குழந்தைக்கு ஜீவனாம்சம் பெற்றுத் தருமாறு கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

எதிர்மனுதார் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"மனுதாரின் தாயார் எல்லம்மா எனது மனைவியுடன் மிக நெருக்கமாகப் பழகி வந்தார். அந்த சந்தர்ப்பத்தில் எல்லம்மா என் மனைவியிடமிருந்து கைமாற்றாகப் பணம் வாங்குவது வழக்கம்.

"ஒரு சமயம் எல்லம்மா என் மனைவியிடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கத் தாமதிக்கவே, என் மனைவி அவருக்கு அதனை ஞாபகமூட்டினார். அப்பொழுது எங்கள் வீட்டுக்கு அருகில் வந்து நின்று கொண்டு எல்லம்மா என் மனைவியைத் தூஷண வார்த்தைகளால் ஏசினார்.

"இந்தச் சம்பவம் பற்றி, எங்கள் டிவிஷனைச் சேர்ந்த உதவி சுப்ரிண்டனிடம் நான் முறைப்பாடு செய்தேன். ரப்பர் பால் வெட்டிக் கொண்டிருந்த எல்லம்மாளை சாதாரணத் தொழிலாளியாகத் தரம் குறைத்தார் உதவி சுப்பிரிண்டன்ட். இதனைத் தொடர்ந்து மனுதாரின் பெற்றோருக்கும் எனக்கும் இடையில் மனத் தாங்கல் நிலவியது- இதன் காரணமாகவே இந்தக் கதை சோடிக்கப்பட்டிருக்கிறது.

"கடந்த 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் திகதி நான் திருமணம் செய்தேன், எனது மனைவி. மனுதாரை விடக் கவர்ச்சிகரமானவர்- நாங்கள் சந்தோஷமாகவே வாழ்க்கை நடத்தி வருகிறோம்.

"மனுதார் அவரது லைன் ரூமுக்கு அடுத்த லயன் ரூமில் வசித்து வரும் பெருமாள் என்பவருடன் சிநேகம் கொண்டிருந்தார். பெருமாள் திருமணம் செய்தவராக இருந்தாலும், அந்தத் திருமண வாழ்க்கை ஏழு மாதங்கள் வரை கூட நிலைத்திருக்கவில்லை- மனுதாருடன் மீண்டும் பெருமாள் தொடர்பு கொள்ளத் தொடங்கியதே இதற்குக் காரணம்"-

இந்தக் கட்டத்தில், நீதிபதி மேல் விசாரணையை செப்டம்பர் மாதம் 5-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (க)

## நடிகையிடம் கொள்ளையிட்ட திருடருக்கு பொலீஸ் வலை

நியூயோர்க், ஆக. 20

நடிகையிடம் கொள்ளை அடித்த திருடர்களைப் பிடிக்க நியூயோர்க் பொலீஸார் தீவிர வேட்டை நடத்தி வருகின்றனர்.

பிரபல ஹொலிவூட் நடிகை சாசா கபோரிடம் இருந்து 7,00,000 டாலர் பெறுமதியான வைர நகைகளை ஆயுதம் தாங்கிய இருவர் நேற்று முன்தினம் அபகரித்துச் சென்றனர்.

செல்வி கபோர் "லிப்டி"ல் சென்று கொண்டிருந்தபோது இந்தப் பயங்கர கொள்ளை நடைபெற்றது.

நடிகையுடன் "லிப்டில்" சென்று கொண்டிருந்த இருவர் அந்தக் கொள்ளையை நடத்தினர். நடிகை கபோரர் "லிப்டி"ல் தனது அறைக்குச் சென்று கொண்டிருந்தார். அவர் அணிந்திருந்த இரு வைர மோதிரங்கள், ஒரு செட் வைர காதணிகள் ஆகியவையே கொள்ளையடிக்கப்பட்டன.

கொள்ளையடிக்கப்பட்ட மோதிரங்களில் ஒன்றின் பெறுமதி மாத்திரம் 5,00,000 டாலர்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர். (க)

## ஹிப்பிகளை ஒழிக்க மலேஷிய கல்வி அமைச்சு திட்டம்

கோலாலம்பூர், ஆக. 19

ஹிப்பிகளுக்கு எதிராக மலேஷிய கல்வி அமைச்சு போர் தொடுத்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் ஹிப்பிகள் போல நீண்ட முடி வளர்த்து இறுக்கமான ஆடைகள் உடுத்தி வருவதை அனுமதிக்க வேண்டாம் என ஆசிரியர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

உத்தரவுக்கு மாறாக மாணவர்கள் பாடசாலைகளிலும் ஹிப்பிகள் போல நடந்து கொள்வார்களேயானால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

அப்போதும் ஹிப்பி மாணவர்கள் பணியாது விட்டால் அவர்களின் நீண்ட முடியை வெட்டி எறிய ஆசிரியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (க)

## மாபெரும் பொதுக் கூட்டம்

23. 8. 70 ஞாயிற்றுக்கிழமையன்று அக்கரப்பத்தனை பசுமலை மைதானத்தில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்து வருகிறது.

இக்கூட்டத்தில் கௌரவ தொழில் அமைச்சர் திரு. மைக்கல் சிறிவர்த்தன கலந்து உரையாற்றுவார்.

## "நான் விரும்பி அவருடன் கூடிச் செல்லவில்லை"

"அவர் எனக்குத் தந்த இனிப்பை நான் சாப்பிட்டேன். அதைச் சாப்பிட்ட பின் நான் மயக்கமடையவில்லை. ஆனால் நான் சுய உணர்வுடன் இருக்கவில்லை. அப்பொழுது என்ன நடைபெறுகிறது என்று எனக்குத் தெரியாது. நான் பஸ்ஸில் இருந்ததோ, சந்தேக நபருடன் கூடி அவருடைய வீட்டுக்குப் போனதோ எனக்குத் தெரியாது. பொலீஸார் அங்கே வந்து என்னைக் கைது செய்யும் வரை எனக்கு நடந்தது ஒன்றுமே தெரியாது."

கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் திரு. நந்தா விஜயசேகரா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கடத்தல் வழக்கில் சாட்சியமளித்த 15 வயதுடைய எம். லட்சுமி என்ற பெண் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வழக்கில், வயது வராத தன் மகளான லெட்சுமியைத் தனது பாதுகாப்பில் இருந்து கடந்த அக்டோபர் 24-ம் திகதி கடத்திச் சென்றதாக, கங்கொடவிலையைச் சேர்ந்த என். எம். இஸ்மாயில் என்பவர் மீது குற்றம் சாட்டி, அங்கொடையைச் சேர்ந்தவரும் லெட்சுமியின் தந்தையுமான எஸ். முத்துவீரன் என்பவர் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

வழக்கு விசாரணையின்போது சாட்சியமளித்த லெட்சுமி தொடர்ந்து கூறியதாவது:—

"சம்பவம் நடைபெற்ற தினம் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான் எனது பெற்றோருடன் அங்கொடையில் வசித்து வருகிறேன். அன்று காலை சுமார் பத்து மணியளவில் டெய்லரிடம் சென்று எனது உடுப்புக்களை வாங்கிக் கொண்டு வருவதற்காக நான் வீதியில் போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது என் அருகில் வந்த எதிரி, தமது வீட்டுக்கு வரும்படி என்னை அழைத்துவிட்டு, என்னிடம் இரண்டு இனிப்புக்களைத் தந்தார். அவற்றை நான் சாப்பிட்டேன்.

"எதிரி எங்கள் வீட்டுக்குப் பல முறை வந்திருக்கிறார். அவரை முன்னரே எனக்குத் தெரியும். சம்பவம் நிகழ்ந்த தினத்திற்கு முந்திய தினமும் அவர் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். அப்போது அவர் எனக்கு இனிப்புகளைத் தந்தார்.

"அக்டோபர் 26-ம் திகதி பொலீஸார் எதிரியின் வீட்டில் வைத்து என்னைக் கைது செய்தனர், எங்கள் வீட்டிலிருந்து என்னைக் கூட்டிச் செல்லும்படி எனது பெற்றோர் எதிரிக்கு அனுமதி அளிக்கவில்லை."

மாஜிஸ்திரேட்: "உனது சொந்த விருப்பத்தின் பேரில் நீ எதிரியுடன் செல்லவில்லையா?"

சாட்சி: "இல்லை."

இந்தக் கட்டத்தில் நீதிபதி மேல்விசாரணையை செப்டம்பர் மாதம் 30-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (க)

## ஒரே தினத்தில் மூன்று விமானக் கடத்தல்கள்

டோக்கியோ, ஆக. 20

ஆகாய விமானங்களைக் குறிப்பிட்ட பாதையிலிருந்து துப்பாக்கி முனையில் கடத்திச் சென்ற சம்பவங்கள் நேற்று மூன்று கண்டங்களில் நடைபெற்றன.

இதனால் 250 விமானப் பயணிகளும், விமான ஊழியர்களும் குறிப்பிடப்படாத வெவ்வேறு இடங்களுக்குப் பயணம் செய்ய நேரிட்டது.

இம் மூன்று விமானக் கடத்தல் சம்பவங்களுள் மிகவும் ருசிகரமானது ஜப்பான் நாட்டில் நடைபெற்றது. 75 பிரயாணிகளையும், விமான ஊழியர்களையும் கொண்டதும் "அகில ஜப்பான் எயர்லைன்"ச் சேர்ந்ததுமான உள்நாட்டு "போயிங் 727" விமானத்தை 24 வயதுடைய சாச்சியோ இனகாகி என்னும் இளைஞன் கடத்தினான். இதனால் கர்ப்பிணியான பெண் ஒருத்தி கஷ்டப்பட வேண்டியதாகிவிட்டது. முடிவில் பொலீஸார் அவனைக் கைது செய்தபோது "நான் இறக்கத் துணிந்தேன்" என்று கூறினான்.

2-வது விமானக் கடத்தல் சம்பவம் அமெரிக்காவில் நடைபெற்றது. 147 பிரயாணிகளுடனும், 8 விமான ஊழியர்களுடனும் வான வெளியில் "போட்டோரிக்கோ" நோக்கிப் பறந்து கொண்டிருந்த காறிபன் விமானம் "டிசி - 8" கியூபாவிற்கு கடத்திச் செல்லப்பட்டது. கடத்தல்காரனைப்பற்றி இதுவரை எந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை.

மூன்றாவது விமானக் கடத்தல் சம்பவம் ... ஐரோப்பாவில் நடைபெற்றது. (க)

## முளையிற் கிள்ளி விடுக

பகாமாஸுக்கு நூற்றி ஐம்பது மைல் வடக்கே, அத்லாந்திக் சமுத்திரத்தில் அறுபத்தாறு தொன் "நேர்வ்காஸை" அமெரிக்கா புதைத்துள்ளது. இரு தினங்களுக்கு முன்பு நடந்துள்ள இச்சம்பவம் அகில உலகத்திலுள்ள சீவராசிகளுக்கும் தீங்கு விளைக்கக் கூடியதாகும். அதாவது "நேர்வ்காஸ்" எனப்படும் நச்சுக் காற்றை அடைத்துள்ள "கொங்கிறீட்", உருக்கு டப்பாக்கள் வெடிக்குமாயிருந்தால், அந்நச்சுக் காற்றுக் கடல்களையும் பாழ் படுத்திப் பூலோகத்தையும் கதி கலக்கி விடுமாம். ஐக்கிய நாடுகள் கடல் துறைச் சமாதானக் கமிட்டி இதுபற்றிக் கவலை கொண்டுள்ளதோடு இச்செயலைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றையும் விவாதிக்க இருக்கின்றது. பூண்டோடு மனித குலத்தை அழித்துவிடக் கூடிய அமெரிக்கச் செயலை முளையிலேயே கிள்ளி எறிதல் வேண்டும்.

தந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் கட்டிக்கொண்டிருந்த பொழுது

# மந்திரக்காரர் மனைவி நஞ்சிடம் தஞ்சமானாள்

## தீராத நோய்க்கு தீர்வு கண்டாளாம்

"ஒரு வீட்டில் இருந்த வியாதிக்காரருக்கு நூல் மந்திரித்துக் கட்டுவதற்காக நான் அங்கு போயிருந்தேன். வீதியில் போய்க் கொண்டிருந்த சிலர், என் வீட்டுப் பக்கத்தில் இருந்து கூக்குரல் கேட்டதாகச் சொல்லி விட்டுப் போனார்கள். நான் வீட்டுக்கு ஓடிப் போனேன். அங்கே என் மனைவி நஞ்சு குடித்து விட்டதாகவும், அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றிருப்பதாகவும் அறிந்தேன்"-

பேருவளை, பந்துராகொட கொலனியில் ஏ. ஹேமாவதி என்ற பெண்ணின் மரணம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. டி. டி. ரணவீர நடத்திய விசாரணையின் போது சாட்சியமளித்த காலஞ்சென்ற பெண்ணின் கணவரான எம். சுதேரிஸ் அப்புஹாமி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"சம்பவம் நடைபெற்ற தினத்தன்று ஒரு வியாதிக்காரருக்கு நூல் மந்திரித்துக் கட்டுவதற்காக ஒரு வீட்டுக்குப் போயிருந்தேன். அப்பொழுது வீதியால் போய்க் கொண்டிருந்த சிலர், என் வீட்டுக்குப் பக்கத்திலிருந்து கூக்குரல் கேட்டதாகச் சொன்னதை அடுத்து வீட்டுக்கு ஓடிப் போனேன். அங்கே என் மனைவி நஞ்சு குடித்து விட்டதாகவும். அவளை நாகொட ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றுள்ளதாகவும் அறிந்தேன்.

"என் மனைவி ஹேமாவதி பல வருட காலமாக சுகவீனமுற்றிருந்தார். சில சமயங்களில் நிலத்தில் விழுந்து துடிதுடித்து, பல மணித்தியாலங்கள் பேச்சு மூச்சற்றுக் கிடப்பார். இந்த நோய்க்காக அவருக்கு நாகொட ஆஸ்பத்திரியிலும் மற்றும் ஆயுள் வேத வைத்தியர்களிடமும் சிகிச்சையளித்து வந்தோம். ஆனால் அவரது நோய் குணமடையவில்லை.

"இதன் காரணமாக அவர் மனவருத்தத்துடன் காணப்பட்டார். நஞ்சு குடித்துத் தனது வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கப் போவதாக அவர் பல முறை சொல்லியிருக்கிறார்".

காலஞ்சென்றவரின் மகளான எம். சுமனாவதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"மலசலகூடப் பக்கத்தில் இருந்து ஏதோ சப்தம் கேட்டு நான் அங்கே ஓடிப் போனேன். அங்கே காலஞ்சென்ற எனது தாயார் தரையில் விழுந்து கிடப்பதைக் கண்டேன். அவருக்கு அருகில் ஒரு கோப்பையும் கிடந்தது. அவரது உதடுகள் கருகிப் போய் இருந்தன. நச்சுத் திராவகத்தின் மணம் வீசியது. நான் கூக்குரல் இட்டேன். ஸ்தலத்திற்கு ஓடி வந்த எனது மாமா, என் தாயாரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார். அவர் இறந்து விட்டதாக டாக்டர் அறிவித்தார்"

சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி. தற்கொலை என்று தீர்ப்பளித்தார். (க)

## சந்திரக் கல்லைப் பார்க்க போனவருக்கு உதையாம்

மனுதாரர் முதலாவது எதிரியின் மகளைத் திருமணம் செய்தவர். ஒரு நாள் முதலாவது எதிரி மனுதாரின் வீட்டிற்கு வந்து சந்திரக் கல் கண்காட்சியைப் பார்க்கப் போவதாகக் கூறி மனுதாரரின் மனைவியையும் கூட அழைத்துச் சென்றார். அதன் பின் பல நாட்களாகியும் தனது மனைவி வீடு திரும்பாததால் மனைவியைத் தேடி மாமனார் வீடு சென்ற மனுதாரரை நன்றாக அடித்து உதைத்து வெளியே அனுப்பினாராம் முதலாம் எதிரியான மாமனார்.

மத்துகம நீதவான் முன்னிலையில் எடுக்கப்பட்ட ஓர் வழக்கில் முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 1969-ம் ஆண்டு டிசம்பர் 19-ம் திகதி மத்துகமத்தைச் சேர்ந்த மந்தெனியா என்ற இடத்தில் வசிக்கும் டி. எல். திலகரத்தின என்ற தபால் ஊழியரைத் தாக்கிக் காயம் உண்டு பண்ணியதாக அதே இடத்தைச் சேர்ந்த டி. எஸ். குணவர்தன, கமலா குன்னங்கரா, சரத் குணவர்தன ஆனந்த குணவர்தன ஆகிய நால்வர் மீதும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர் மேலும் தெரிவித்ததாவது:

"முதலாம், இரண்டாம் எதிர் மனுதாரர்கள் மனுதாரரின் மாமன், மாமி ஆகியோராவர். மற்றிரு எதிரிகளும் மனுதாரின் மைத்துனர்களாகும்.

ஐயா, அமெரிக்கா சந்திர மண்டலத்திற்கும் போய் வந்தது உங்களுக்கு நன்றாக ஞாபகம் இருக்கும்.

நீதவான்: இவர்களும் அமெரிக்கர்களுடன் சேர்ந்து சந்திரனுக்குச் சென்றார்களா?

வழக்கறிஞர்: அப்படி நடந்திருந்தால் தான் பரவாயில்லையே! ஐயா; சந்திரமண்டலக் கல்லை அமெரிக்கர்கள் கொண்டுவந்து கொழும்பில் கண்காட்சிக்கு வைத்திருந்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என நினைக்கிறேன். இக்காட்சியே இவ் வழக்கில் முக்கிய இடம் வகிக்கிறது.

"இந்தக் கண்காட்சிக்கு சென்ற மனைவியைத் தேடிச் சென்ற மனுதாருக்கு அடியும் உதையும் தான் கிடைத்திருக்கிறது"

எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்: முடிக்குரிய வழக்கறிஞரின் வாதத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். மனைவியைத் தேடிவந்த மனுதாரர் மாமனார் வீட்டை சேதம் படுத்தியதாலேயே அவர் தாக்கப்பட்டார்.

நீதவான்: மனுதாருக்கு எத்தனை பிள்ளைகள் உண்டு?

முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர்: ஒன்று.

"அனைவரும் ஒற்றுமையாக வர முடியாதா?" என நீதவான் கேட்டதற்கு இருதரப்பினரும் ஒத்து வராததைத் தொடர்ந்து வழக்கு நவம்பர் 26-ம் திகதிவரை பின்போடப்பட்டது. (க)

## இளைஞனுடன் அவளுக்கு முன் தொடர்பு இருந்ததாம்

சான்பிரான்ஸிஸ்கோ, ஆக. 20

நீதிமன்றத்துள் வைத்து ஒரு நீதிபதியும் மற்றும் மூவரும் கொலை செய்யப்பட்டதன் எதிரொலியாக பொலீஸாரால் தேடப்பட்டு வரும் பல்கலைக்கழக ஆசிரியை அஞ்செலா டேவிஸ் துப்பாக்கி இளைஞனுடன் முன்னர் பல தடவைகள் காணப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 7ந் திகதி கலிபோர்னியாவில் உள்ள மார்ஜின் என்னும் இடத்தில் உள்ள நீதிமன்றத்தில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது.

செல்வி அஞ்செலா டேவிஸ் என்னும் அந்த ஆசிரியை மீது கொலை, கடத்தல் ஆகிய குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்த ஆசிரியையுடன் சேர்ந்து நீதிபதியையும் மூன்று கறுப்பர்களையும் சுட்டுக் கொண்ட 17 வயது இளைஞன் ஸ்தலத்திலேயே பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டான்.

இவர்கள் இருவரும் கடந்த மாதம் 31-ம் திகதி மெக்ஸிகோவில் இருந்து கலிபோர்னியாவுக்கு அஞ்செலா டேவிஸுக்குச் சொந்தமான வாகனமொன்றில் சென்று கொண்டிருக்கையில் மெக்ஸிக்கன் – யு. எஸ். தடுப்புப் பாதையில் காணப்பட்டார்கள் எனத் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பஸ்ஸைத் திருடிக் கொண்டு கதிர்காமம் போனாராம்

பஸ் ஒன்றைத் திருடிக் கொண்டு, நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காகக் கதிர்காமம் புறப்பட்டவர் போகும் வழியிலேயே பொலீஸாரிடம் சிக்கினார்.

இரத்தினபுரி நீதிபதி திரு. ஸ்ரீலால் பெரேரா முன்னிலையில் நடைபெற்ற இந்த வழக்கில் அசோகா விஜேவர்த்தன என்பவர் எதிரி.

இறக்குவானையில் நிறுத்தப்பட்டிருந்த பஸ் ஒன்றைத் திருடியதாக எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டு இருந்தது.

வழக்கு விசாரணையின்போது, "பஸ்ஸை ஏன் திருடினாய்?" என்று நீதிபதி எதிரியிடம் கேட்டார்.

அப்பொழுது எதிரி, தான் கல்வி கற்ற வாலிபர் என்றும் வேலை இல்லாதபடியால் மனவருத்தம் அடைந்திருந்ததாகவும் கதிர்காமக் கடவுளுக்கு நேர்த்திக்கடன் நிறைவேற்ற இருந்தபடியால் பஸ்ஸை எடுத்துச் சென்றதாகவும் சொன்னார்.

அப்பொழுது நீதிபதி எதிரியைப் பார்த்து, "நீர் இந்த வழியில் சென்றால் ரயிலையும் திருடி விடுவீர்" என்று கூறி மேல் விசாரணையை ஆகஸ்ட் 30-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (5)

## தற்கொலை

வவுனியா, பெரிய தம்பானை என்ற இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளுக்குத் தாயாரான ஜயாத்துரை மனோன்மணி என்ற பெண், நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

## கடும் மழையில் ஆசிரியர் ஒருவர் பட்ட அவஸ்தை

மழைக்கு ஒரு வீட்டில் ஒதுங்கினார் ஆசிரியர் ஒருவர். அவர் மேல் சந்தேகமுற்ற அவ்வீட்டார், அவரை ஓட ஓட விரட்டிக் கலைத்தனர். இச்சம்பவம் நாவலப்பிட்டி சேலம் பிரிட்ஜ் பிரதேசத்தில் நடந்துள்ளது.

நாவலப்பிட்டி பகுதி வீடுகளில் அடிக்கடி திருட்டு நடைபெறுவதால் தங்களை உஷார்படுத்திக் கொண்டுள்ள இப்பகுதி மக்கள், பகலில் தம் வீடுகளைப் பூட்டியே வைத்துள்ளனர். இப்படிப் பூட்டப்பட்ட வீடு ஒன்றின் ஓரத்தில் மழைக்காக அந்த ஆசிரியர் ஒதுங்கியபோது, அவர் மேல் சந்தேகப்பட்டு அவரை மழையில் ஓட ஓடக் கலைத்தனர் வீட்டுக்காரர். பாவம் ஆசிரியர், மழையில் ஓடித் தப்பினார். (க)


நினைப்பதெல்லாம் கைகூடுவதற்கு . . . .

உங்கள் பிரச்சினை எதுவாகிலும் சரி, உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று, தொழிலில் உயர்வடைந்து, வாழ்க்கையில் வெற்றியடைந்து குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ, கடையிலோ

ஸ்ரீ ராம வாசனைப் புகையை

தவறாது பாவித்து பலன் அடையுங்கள்.

ஒரு மாத பாவனைக்கு ரூ. 3–25
மூன்று மாத பாவனைக்கு ரூ. 7–50

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை, பந்தயம், வழக்கு மற்றும் செல்லும் இடமெல்லாம் வெற்றியை தரவல்லது.

ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்

(விலை ரூ. 15/50 மட்டுமே)

வேறு எந்த காரணமாயிருந்தாலும் முழு விபரங்களையும் எமக்கு எழுதி தவறாத நிவர்த்தியைப் பெறுங்கள். வசியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் விசேஷமாக கவனிக்கப்படும். காதலில் வெற்றி, பெற்றோரின் விருப்பம், நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற
மகா மாந்திரீகர்

நீலன் கந்தசாமி,
லக்ஸல கட்டிடம், நிட்டம்புவ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் சபை நிறுவ அரசு திட்டம் வகுத்துள்ளது

## நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அரிசி வாங்க முடியுமாம்

அரசாங்கம் தானே நெல்முழுவதையும் வாங்கி குத்தி அரிசியாக்கி, அதனை விநியோகம் செய்யக் கூடிய விதத்தில் நெல் சபை ஒன்றை அமைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது.

ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் திரு. எம். கே. பெரேரா புதிய நெல் சபையின் தலைவராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது திரு. பெரேரா, உத்தியோகப் பற்றற்ற தலைவராக இருந்து கூட்டுத்தாபனத்தை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை ஒரு விசேஷ காரியாலயத்தில் வைத்துச் செய்து வருகிறார்.

நெல் சபையை கூடிய விரைவில் நிறுவுவதற்கு சட்ட விதிகளை துயாரிக்கும்படி விவசாயத்துறை அமைச்சர் திரு. ஹெக்டர் கொபேகடுவ உத்தரவிட்டுள்ளார்.

நெல் சபை நிறுவப்பட்டதும் நெல் வாங்குவதற்கான உத்தரவாத விலைத் திட்டம் மாற்றப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு புசல் நெல்லை இப்போதைவிட அதிக விலை கொடுத்து வாங்குவதற்கான திட்டம் ஒன்றும் இது சம்பந்தமாக பரிசீலனை செய்யப்படுகிறது.

சாப்பாட்டுக் கடைகளும் தனியார் துறையைச் சேர்ந்த ஏனைய கடைகளும் நிர்ணயிக்கப்பட்ட ஒரு விலைக்கு நெல் சபையிலிருந்து அரிசி வாங்கக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## ஒழுங்காக உடை அணியாத சுந்தரருக்கு எச்சரிக்கை

வழக்கு விசாரணையின்போது கழுத்துப்பட்டி அணிந்து பூரண வழக்கறிஞர் உடையில் ஆஜராகாத மாவை ஆலய உற்சவ கால நிர்வாகி திரு. ஸி. சுந்தரலிங்கத்தை யாழ் மாவட்ட நீதவான் ஜனப் ஐ. எம். இஸ்மாயில் எச்சரிக்கை செய்தார்.

மாவை ஆலயத்துக்குள் ஹரிஜனர்கள் பிரவேசிப்பதைத் தடை செய்யக்கூடாது என ஆலய தர்மகர்த்தா பிரம்மஸ்ரீ துரைசாமிக் குருக்கள், திரு. ஸி. சுந்தரலிங்கம் ஆகியோர் மீது பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால உத்தரவு சம்பந்தமான விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த வழக்கு விசாரணையில் தனக்குத் தானே வாதாட வந்திருந்த திரு. சுந்தரலிங்கம், வழக்கறிஞர் உடையை பூரணமாக அணிந்திருக்கவில்லை. அவரை எச்சரித்தை செய்த நீதவான் மறுமுறை இவ்விதம் வரவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

அட்டோர்னி ஜெனரல் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் குருசாமி, மேற்குறிப்பிட்ட இடைக்கால உத்தரவை அவர்கள் இருவர் மீதும் ஏன் பிறப்பிக்கப்பட்டது என்பதை விவரித்தார்.

"ஹரிஜனர்கள் ஆலயப் பிரவேசம் செய்வதைத் தடுத்தார். அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்றே அவர்கள் மீது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனல் அவர்கள் அந்த உத்தரவை மீறி விட்டார்கள். அந்த உத்தரவை சரியாக அமுல் நடத்த வேண்டும்" என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மேல் விசாரணையை அக்டோபர் 8, 9, 10-ம் திகதிகளுக்கு ஒத்தி வைத்தார் நீதவான். (க)

## ஜீவனும்ச வழக்கு விசாரணையில் வருமானவரி டிமிக்கி அம்பலம்

பராமரிப்பு வழக்கு ஒன்றில் வாதியான மனைவிக்கு எதிராகச் சாட்சியமளித்த ஒரு கொந்தராத்துக்காரர், இறுதியில் வருமானவரி செலுத்தாது "டிமிக்கி" விட்டதற்காக திருகோணமலை நீதவானிடம் அகப்பட்டுக் கொண்டார். இச் சுவையான சம்பவம் அண்மையில் திருகோணமலை நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இதுபற்றிய விபரமாவது:—

தனக்கும் தனது எட்டுப் பிள்ளைகளுக்கும் ஜீவனும்சம் கோரி 47 வயதான அஸ்லின் நோனு என்ற பெண் பி. ஆர். விஜயவீரா என்ற கொந்தராத்துக்காரர் மேல் தொடர்ந்த வழக்கு அண்மையில் திருகோணமலை நீதவான் திரு. டி. சி. டபிள்யூ. விக்ரமசேகரா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அஸ்லின் நோனு சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"கொந்தராத்துக் காரரான பிரதிவாதியை நான் 24 வருடங்களுக்கு முன்னர் மணமுடித்து எட்டுப் பிள்ளைகளுக்குத் தாயானேன். கடந்த ஒரு ஆண்டு காலமாக பிரதிவாதி என்னையும் பிள்ளைகளையும் பராமரிக்கவில்லை.

"அப்பொழுது பிரதிவாதி நந்தாவதி என்ற பெண்ணுடன் வாழ்க்கை நடத்துகிறார். இப் பெண்ணினல் பிரதிவாதிக்கு மல்காந்தி என்ற குழந்தையும் உண்டு.

"பிரதிவாதியின் மாத வருமானம் 500 ரூபா ஆகும். அவருக்கு இலங்கை வங்கியில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது" என்றார்.

பிரதிவாதி சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"வாதி எனது மனைவி. அவருக்கு பிறந்த எட்டுப் பிள்ளைகளுக்கும் நானே தந்தை.

"நான் வாதியுடன் நட்புக் கொள்வதற்கு முன்னர் வாதி சுரோலிஸ் என்பரை மணமுடித்தார். அலிஸ்நோனு என்ற பெயர் உள்ள பெண் ஒன்று வாதிக்கு அத்திருமணத்தின் மூலம் பிறந்தது.

"நான் ஹோட்டல் ஒன்றை நடத்தி வந்தேன். இரண்டு மாதங்களில் அந்த ஹோட்டலால் 6000 ரூபா லாபம் கிடைத்தது. தினமும் 800 ரூபா ஹோட்டலால் வந்தது. செலவு போக சுத்த லாபமாக 100 ரூபா தினமும் வந்தது.

நீதவான்: வருமானவரி கட்டியதுண்டா?

பிரதிவாதி: இல்லை.

நீதவான்: மாதம் 300 ரூபா லாபம் வந்தும் வருமானவரி கட்டவில்லையா?

பிரதிவாதி: இல்லை.

நீதவான்: விரைவில் உன்னைத் தேடி வருமானவரி அதிகாரிகள் வருவர்.

பிரதிவாதி தொடர்ந்து சாட்சியமளிக்கையில். "அந்த ஹோட்டலை நான் வாதிக்கு கொடுத்துள்ளேன். ஹோட்டல் வருமானத்தில் தான் வாதி வாழ்க்கை நடத்துகின்றார். ஹோட்டலை எனக்குத் திருப்பித் தந்தால் நான் வாதிக்கும் பிள்ளைகளுக்கும் கேட்கும் தொகையை பராமரிப்புப் பணமாக கட்டுவேன்" என்றார்.

இக்கட்டத்தில் வழக்கறிஞர்களின் தொகுப்புரை செப்டம்பர் 7-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க-287)

## சேர். ராஸிக் பரீத் நாடுதிரும்புகிறார்

கொழும்பு, ஆக. 21

பாகிஸ்தானில் உள்ள இலங்கைத் தூதுவர் சேர். ராஸிக் பரீத் தனது இரண்டுவருட கால சேவையை முடித்துக் கொண்டு அக்டோபர் 6-ம் தேதி இலங்கை திரும்புகிறார்.

கடந்த 1968 மே மாதம் பாகிஸ்தானில் இலங்கைத் தூதுவராக சேர். ராஸிக் பரீத் நியமிக்கப்பட்டார்.

செப்டம்பர் 22-ம் தேதி இஸ்லாமாபாத்தில் இருந்து புறப்படுவதற்கு முன் சேர். ராஸிக் பாகிஸ்தான் ஜனதிபதியைச் சந்தித்து விடைபெறுவதற்கு உள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தான் வழியாக அவர் நீராவிக் கப்பல் ஒன்றில் இலங்கைக்கு வருகிறார். (ஜ)

## சுவீப் முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுதல் பரிசுகள் பெறும் 100 ரூபா டிக்கட்டுகளின் விபரம்:—

| | |
|---|---|
| **A** | |
| 16 A 0675 | 05 A 0699 |
| 17 A 0486 | 02 A 0209 |
| 30 A 0867 | 36 A 0576 |
| 25 A 0220 | 36 A 0475 |
| 11 A 0905 | |
| **B** | |
| 18 B 0469 | 30 B 0004 |
| 22 B 0177 | 09 B 0863 |
| 26 B 0516 | |
| **C** | |
| 08 C 0440 | 16 C 0425 |
| **D** | |
| 34 D 0003 | 30 D 0235 |
| 10 D 0073 | 37 D 0630 |
| 25 D 0378 | 02 D 0197 |
| 14 D 0028 | 03 D 0960 |
| 13 D 0685 | |
| **E** | |
| 30 E 0875 | 02 E 0696 |
| 03 E 0658 | |
| **F** | |
| 33 F 0302 | 15 F 0466 |
| 27 F 0555 | 35 F 0227 |
| 24 F 0865 | |
| **G** | |
| 20 G 0196 | 25 G 0096 |
| **H** | |
| 01 H 0219 | |
| **J** | |
| 32 J 0749 | 03 J 0410 |
| 25 J 0795 | 16 J 0930 |
| **K** | |
| 25 K 0966 | 26 K 0368 |
| 22 K 0581 | 32 K 0541 |
| **L** | |
| 14 L 0618 | 30 L 0922 |
| **M** | |
| 15 M 0028 | 24 M 0438 |
| 22 M 0533 | |
| **N** | |
| 23 N 0039 | 17 N 0059 |
| 30 N 0076 | 24 N 0838 |
| 40 N 0203 | 34 N 0407 |
| **O** | |
| 28 O 0918 | 01 O 0264 |
| **P** | |
| 13 P 0118 | 19 P 0553 |
| **Q** | |
| 05 Q 0372 | 35 Q 0890 |
| 15 Q 0914 | 06 Q 0462 |
| 29 Q 0373 | 13 Q 0213 |
| 17 Q 0736 | |
| **R** | |
| 35 R 0876 | 34 R 0156 |
| 27 R 0107 | 30 R 0341 |
| 34 R 0184 | |
| **S** | |
| 35 S 0665 | 21 S 0244 |
| **T** | |
| 14 T 0706 | 07 T 0987 |
| 36 T 0748 | |
| **U** | |
| 36 U 0520 | 27 U 0142 |
| 37 U 0933 | |
| **V** | |
| 30 V 0578 | 20 V 0702 |
| 03 V 0002 | 08 V 0601 |
| **W** | |
| 24 W 0908 | 12 W 0167 |
| 21 W 0024 | 37 W 0751 |
| 07 W 0512 | |
| **X** | |
| 15 X 0564 | 16 X 0283 |
| 34 X 0732 | 05 X 0435 |
| 32 X 0748 | 03 X 0221 |
| **Y** | |
| 10 Y 0482 | 18 Y 0370 |
| 07 Y 0002 | 33 Y 0697 |
| 23 Y 0154 | |
| **Z** | |
| 35 Z 0784 | |

## விழுந்து மரணம்

புலோலி தெற்கைச் சேர்ந்த முனியன் செல்லையா என்பவர் பனை மரத்திலிருந்து கீழே விழுந்து துடிதுடித்து மரணமானர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். ராமநாதன், விசாரணையின் பின் விபத்தினல் மரணம் சம்பவித்ததாகத் தீர்ப்பளித்தார். (க)

## பாப்பரசரை வரவேற்க மாநகரசபை தீர்மானம்

"பரிசுத்த பாப்பாண்டவரின் முதலாவது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை விஜயத்தின்போது அவருக்கு மகத்தான பொது வரவேற்பொன்றைக் கொழும்பு மாநகர சபை அளிக்கும்."

கொழும்பு மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் நகர பிதா திரு. வின்சென் பெரேரா தலைமையில் நடைபெற்றது.

அளுத்கடை மேற்கு வட்டார அங்கத்தவர் திரு. சார்ல்ஸ் வேதக்கனல் கொண்டு வரப்பட்ட பாப்பரசருக்கு வரவேற்பளிப்பது சம்பந்தமான மேற்படி இப் பிரேரணை அங்கத்தவர்களால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அத்தோடு, கொழும்பு நகரை முன்னேற்றுவது மற்றும் பலதரப்பட்ட செலவுகளுக்கு நிதி திரட்டுவதற்காக மாநகரசபையால் சுவீப் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்ற பிரேரணையும் அங்கத்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மகாவத்த வட்டார உறுப்பினர் திரு. ஷெல்ரன் ஜே. அபயரெட்னவால் இப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

இவரது மற்றும் ஓர் பிரேரணையான "கால் பேஸ் திடலில் பேரயா, பேரயா முன்தினம் ஆகிய நாட்களில் மாலை 5 மணிமுதல் இரவு 10 மணிவரை "றெடிபியூஷன்" கருவிமூலம் சங்கீத இசைகளை ஒலிபரப்ப வேண்டும் என்ற பிரேரணை, றெடிபியூஷன் கருவி என்ற பதத்தை அகற்றும் திருத்தப் பிரேரணை ஒன்றுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (க)


# கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

**S. P. S. ஜெயம் அன் கோ.**

மதுரை - கொழும்பு.

விற்குமிடம்:—

34, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

தபால் பெட்டி: 1298.

தொலைபேசி எண்: 26584





இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 21 ஆகஸ்ட் 1970.
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12, (Ceylon),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org